வரைவு

# இலங்கை உள்ளூராட்சி மன்றங்களுக்கான பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்வது பற்றிய வசதிகள் செய்வோருக்கான வழிகாட்டி

ஆசிய மன்றம்

2011

## உள்ளடக்கம்

அத்தியாயம் 1 : அறிமுகம் ........................................................................................................ 4

அத்தியாயம் 2 : ஆரம்பம் ........................................................................................................ 5

அத்தியாயம் 3 : வரவு – செலவுத் திட்டமிடலுக்கு முன்னரான தரவுகளை சேகரித்தல் மற்றும் செயன்முறைப்படுத்தல். 9

அத்தியாயம் 4 : உள்ளூராட்சி மன்றங்களின் கடந்தகால வரவு செலவுத் திட்டம் மற்றும் நிதிச் செயலாற்றுகை பற்றிய பகுப்பாய்வு 15

அத்தியாயம் 5 : 2012 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான ஒதுக்கங்கள் பற்றிய பகுப்பாய்வு 17

அத்தியாயம் 6 : கிராம அலுவலகர் மட்டத்தில் சமுதாயக் கலந்தாராய்வுகள் 19

அத்தியாயம் 7 : பிந்திய ஆலோசனை ஆவணமயப்படுத்தல் மற்றும் செல்லுபடியானதாக்கல் 26

அத்தியாயம் 8 : இறுதி ஆவணமயப்படுத்தல் 26

அத்தியாயம் 9 : கண்காணிப்புத் திட்டம் 26

# நன்றியுரை

உள்ளூராட்சி மன்றங்களின் பங்கேற்பு திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்வதில் தொடர்புபட்டுள்ள வசதிகள் செய்வோரின் உபயோகத்துக்காக இந்த வழிகாட்டித் தொகுப்பு தயார் செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள் பங்கேற்பு உள்ளூர் அபிவிருத்தி திட்டமிடல் செயற்பாடு தொடர்பான அனுபவத்தைக் கொண்டுள்ள போதிலும் பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்வது தொடர்பான அனுபவத்தைப் பெறவில்லை. எவ்வாறாயினும் உள்ளூராட்சி மன்றங்கள் மத்தியிலான பங்கேற்பு அபிவிருத்தி திட்டமிடலில் முக்கியதொரு அம்சமாக பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்வது அமைந்துள்ளது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்வதற்காக இந்த வழிகாட்டல் தொகுப்பில் முன்மொழியப்பட்டுள்ள செயற்பாடுகளை அமுல்படுத்துவதன் ஊடாக மேலதிக பெறுபேறாக உள்ளூராட்சி மன்றங்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டங்களை தயார் செய்வதிலும் நல்லதொரு மட்டத்தை அடைந்து கொள்ள முடியும்.

உள்ளூராட்சி மன்றங்களில் பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்வதில் இரண்டு முக்கிய அம்சங்கள் சம்பந்தப்பட்டுள்ளன. முதலாவது அம்சம், நிதி முகாமைத்துவம் சம்பந்தமான விளைவுகளுடன் தொடர்பானவையாகும். மற்றைய அம்சமாக இருப்பது, உள்ளூராட்சி மன்றத்தின் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அமுல்படுத்தப்பட வேண்டிய முன்னுரிமைவாய்ந்த சமூகத் தேவைப்பாடுகள் பற்றிய சமூகத்தின் ஆலோசனைகள் ஆகும். செயற்பாடுகள், ஒவ்வொரு செயற்பாட்டினதும் விளைவுகள் மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள கால வரையறை ஆகிய இரு அம்சங்கள் தொடர்பிலும் இங்கு விளக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்யும் செயல்முறையை அமுல்படுத்துவதில் பிரதானமாக சம்பந்தப்பட்டுள்ள தரப்பினர்களை பயிற்றுவிப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இந்த வழிகாட்டல் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 1 : அறிமுகம்

### பங்கேற்பு வரவு செலவுத் திட்டம் எதற்காக?

- பங்கேற்பு வரவு செலவுத் திட்டமானது, பிரசைகளுக்கு சேவையாற்றும் போது கூட்டாக செயற்படுவதற்கு உள்ளூராட்சி மன்றத்ததுக்கும், சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும், சமூகத்துக்குமிடையே ஒரு பங்குடைமையை கட்டியெழுப்பும் வாய்ப்பை அளிக்கின்றது.
- பங்கேற்பு வரவு செலவுத் திட்டமானது, சமூகம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடனான கலந்துரையாடல்களின் ஊடாக உண்மையான தேவைகளையும், தேவைப்பாடுகளையும் இனங்காண உதவுகின்றது.
- அபிவிருத்தி செயல்பாடுகளை அமுல்படுத்தும் போது மாற்றுச் செயற்பாடுகளை தவிர்ப்பதுடன், சம்பந்தப்பட்ட அமைப்புகளினால் குறிப்பிடப்படுகின்ற முன்னுரிமைத் தேவைப்பாடுகளை இனங்காண முடியும்.
- உள்ளூராட்சி மன்றத்தின் வரவு செலவுத் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட தகவல்களை பரிமாற்றிக் கொள்வதன் ஊடாக அபிவிருத்தி செயற்பாடுகளை அமுல்படுத்துவதில் இன்றியமையாத உள்ளூராட்சி மன்றங்களின் நிதி நிலைமைகள் பற்றி உள்ளூராட்சி மன்றங்களின் சமூகம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் அறிந்து கொள்ள முடியும்.
- பங்கேற்பு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டத்தை ஒன்றிணைக்கும்.
- உள்ளூராட்சி மன்றங்களின் பொருளாதார முன்னுரிமைகளை இனங்காண முடியும்.

### பொதுவான வரவு செலவுத் திட்டத்துக்கும் பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்துக்கும் இடையிலான “ வித்தியாசங்கள்” யாவை?

- பல்வேறு மட்டங்களிலுமுள்ள சமூகத்தினருடன் கலந்துரையாடப்படுவதுடன், அவர்களின் பலதரப்பட்ட தேவைகள் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படும்.
- சமூகத்தின் தேவைகளை இனங்காணும் செயற்பாட்டை உள்ளூராட்சி மன்றங்கள் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்வதுடன், உற்பத்தித்திறன் மிக்கவாறு உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் மற்றும் செலவினம் பற்றிய மதிப்பீடுகளைச் செய்யும்.
- உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டங்கள், சமூகத்துடன் ஒத்திசைந்து இனங்காணப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான நிதி ஏற்பாடுகள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் பற்றிய சரியான மதிப்பீடுகளுடன் கூடிய உண்மையான வரவு செலவுத் திட்டமாக மாறும்.
- உள்நாட்டுப் பொருளாதாரத்துக்குத் தேவையான அபிவிருத்தி செயற்பாடுகள் இனங்காணப்பட்டு உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படும்.

### இந்த வழிகாட்டல் தொகுப்பின் குறிக்கோள்கள் யாவை?

- பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்யும் செயல்முறை தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்கள், ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளைச் சேர்ந்த வசதிகள் செய்வோரை அறிவுறுத்தல்.
- சமூகத்துக்கு சிறந்த சேவை ஆற்றப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, பங்கேற்பு திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்யும் செயல்முறையை உற்பத்திதிறன் மிக்கவாறு ஒருங்கிணைப்புச் செய்தல்.
- ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட சமுதாயத்தின் செயல்ரீதியான பங்கேற்பின் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களில் சமூகத்தின் பங்கேற்பை நிறுவனமயப்படுத்தல்.
- யதார்த்தமான வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்வதன் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களின் நிதி முகாமைத்துவம் மற்றும் வருமான உருவாக்கத்தை வலுவூட்டல்.
- சமூகத்துக்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையிலான கூட்டுப் பங்கேற்பை உருவாக்குவதற்கான சூழலை ஏற்படுத்தல்.

## அத்தியாயம் 2 : ஆரம்பம்

**பின்னணி :**

உள்ளூராட்சி மன்றத்தின் அரசியல் மற்றும் நிர்வாக தலைமைத்துவத்தின் கருத்தொற்றுமையைப் பெற்று பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்யுமாறு வசதிகள் செய்வோர் கோர வேண்டும். பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்யும் செயல்முறை தொடர்பாக உள்ளூராட்சி மன்றத்தின் பதவியணியினரும் அறிவுறுத்தப்படல் வேண்டும். வசதிகள் செய்வோரினால் உள்ளூராட்சி மன்றத்துக்கான பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கு செய்யப்படும்.

**எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறுகளும், விளைவுகளும் :**

- உள்ளூராட்சி மன்றங்கள் மத்தியில் பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்கின்ற செயற்பாடு மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பான அறிவு வளர்க்கப்படல்.
- பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்கின்ற செயல்முறை தொடர்பில் அதிகரிக்கப்பட்ட அரசியல் ஒப்புதல் ஈடுபாடு.
- சகல சம்பந்தப்பட்ட தரப்பினர்களையும் உள்ளடக்கியதாக திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்கின்ற குழுக்கள் உருவாக்கப்படல்.

(செயல்முறைத் திட்டத்தில் பெறுபேறுகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன)

**காலம் :** ஒரு வாரம்

**பரிந்துரைக்கப்பட்ட செயல்முறை (கருவிகள் பயன்படுத்தப்படல் வேண்டும், உதாரணங்கள் மற்றும் மாதிரிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.):**

பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்தின் செயற்பாட்டுக்கான முன் தேவைப்பாடாக, ஆரம்ப செயல்முறையில் ஈடுபடுவதற்கு முன்னர் பின்வரும் முக்கிய செயல்பாடுகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.

- அரசியல் தலைமை மற்றும் பதவியணியின் ஒப்புதல், ஈடுபாட்டை பெற்றுக் கொள்வதற்கான உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.
- திட்டமிடல் குழுக்களை செயலுறுப்படுத்தல்.

| பிரதான செயற்பாடு | நடவடிக்கைகள் | துணைபுரியும் ஆவணங்கள் | வழங்கப்படக் கூடியவை | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| திசைமுகப்படுத் தல் நிகழ்ச்சித்திட்டம் | • தலைவருடன் கலந்தாலோசித்து திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை காலவரையறை செய்தல்.<br>• திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான சமர்ப்பணங்களையும் பொருட்களையும் தயார் செய்தல்<br>• பங்கேற்பு வரவு-செலவுத் திட்டமிடலின் அடுத்த நடவடிக்கைகளின் விபரங்களைப் பகிர்ந்துகொள்ளல்.<br>• கிராம சேவையாளர் பிரிவு ஒவ்வொன்றுக்குமான பொறுப்பதிகாரிகளாக நகரமுதர்வா்/தவிசாளர்கள் உள்ளிட்ட சகல சபை அங்கத்தவர்களிடம் பொறுப்புகளை ஒப்படைத்தல். | திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல்<br>(மாதிரி அமைப்பு 1)<br>சமாப்பணங்கள்<br>(மாதிரி அமைப்பு 2) | பங்குபற்றுபவர்களின் பட்டியல் (டி 1)<br>திசைமுகப்படுத் தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான நடவடிக்கைகளின் சாராம்சம் (டி2)<br>சபை அங்கத்தவர்கள் மற்றும் பொறுப்பளிக்கப் பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளினதும் பட்டியல் (டி3) | |

| | | | | |
|---|---|---|---|---|
| உள்ளூராட்சி மன்ற மட்டத்திலான ஆரம்ப பங்கேற்பு நடவடிக்கை | • சபைக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுதல்<br>• வரவு-செலவுத் திட்டமிடல் செயன்முறைகளுக்கான பணியாளர் தொகுதிக்கென விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்கமைத்தல்.<br>• உள்ளூராட்சிமன்ற மட்டத்திலான பங்கேற்புத் திட்டமிடல் மற்றும் வரவு-செலவுத் திட்டமிடல் ஆகியவற்றுக்கான செயற்பாட்டுத் திட்ட சாராம்சத்தை மேம்படுத்தல் | தீர்மான வரைவு (ரி3)<br><br>செயற்பாட்டுத் திட்டம் சார் வரைவு (ரி 4) | நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரதி (டி4)<br>பணியாட்தொகுதிக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் சபை நடவடிக்கைகளின் சாராம்சம் (டி5) | |
| திட்டமிடல் மற்றும் வரவு-செலவுத்திட்டமிடலுக்கான நிறைவேற்றுக் குழுவை (PBEC) அமைத்தல் | • உள்ளூராட்சி மன்றத்திலிருந்து (நகரமுதல்வர்/தவிசாளர், பிரதி நகரமுதல்வர்/ தவிசாளர்), சபை உறுப்பினர்கள் (ஒவ்வொரு கட்சியிலிருந்தும் ஆகக் குறைந்தது ஒருவர் வீதம்), ஆணையாளர் /செயலாளர், செயன்முறைத் தலைவர், உள்ளூராட்சி ஆணையாளர் /உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோரின் பிரதிநிதி மற்றும் ஏதாவது பணியாளர்) உறுப்பினர்களை இனங்காணல்.<br>• சமூகத்திலிருந்து (அதிகூடியதாக மூன்று உறுப்பினர்களை இனங்காணல்)<br>• PBEC இற்கான பொறுப்புக்களை ஒப்படைத்தல்<br>• PP & B இற்கான செயற்பாட்டுத் திட்டம் பற்றி கலந்துரையாடுதலும் பகிர்ந்து கொள்ளுதலும்<br>• அடுத்த கூட்டத்திற்கான கால அட்டவணையைத் தயாரித்தல். | PBEC இன் வேலைக்கான நோக்கெல்லை (ரி5) | PBEC அங்கத்துவர்கள் பற்றிய பட்டியல் (டி 6)<br><br>PBEC இற்கான கூட்டத்தின் கால அட்டவணை (டி7) | |
| உள்ளூராட்சி மன்ற மட்டத்திலான திட்டமிடல் மற்றும் வரவு-செலவுத் திட்டமிடலுக்கான செயற்பாட்டுக் குழுவை (PBAT) அமைத்தலும் புத்துயிரிப்பளித்தலும். | • உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து சம்பந்தப்பட்ட உறுப்பினர்களை இனங்காணல்.<br>• ''செயன்முறைத் தலைவர்'', ''ஒட்டுமொத்த இணைப்பாளர்'' ஆகியோரை இனங்காணல்.<br>• பிரதான வசதிகள் செய்வோரையும் பொறுப்புடைய கிராம சேவையாளர் பிரிவுகளையும் இனங்காணல்.<br>• PBAT இற்கான பொறுப்புக்களை ஒப்படைத்தல்<br>• சம்பந்தப்பட்ட பிரதான வசதிகள் செய்வோருடன் தொழில் புரிவதெற்கென | PBAT இன் வேலைக்கான நோக்கெல்லை. (ரி6)<br><br>செயற்பாட்டுத் திட்ட விபர வரைவு (ரி7) | PBEC அங்கத்துவர்கள் பற்றிய பட்டியல் (டி 8)<br><br>நிறைவேற்றப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் (டி 9) | |

| | | | | |
|---|---|---|---|---|
| | PBAT இல் உள்ள துணை வசதிகள் செய்வோர்ள்களை இனங்காணல்.<br>• PP & B இற்கான விபரமான செயற்பாட்டுத் திட்டமொன்றை மேம்படுத்தல்.<br>• PP & B இற்கான செயற்பாட்டுத் திட்டத்தைக் கலந்தாலோசித்துப் பகிர்ந்து கொள்ளுதல் | | | |
| திட்டமிடல் குழுக்களை தொழிற்படச் செய்தல் | • கிராம சேவையாளர் மட்டத்தில் தற்போதுள்ள திட்டமிடல் மற்றும் வரவு – செலவுத் திட்டமிடல் குழுக்களுக்கு இடையிலான உறுப்புரிமை இடைவெளியை இனங்காணல்.<br>• திட்டமிடல் மற்றும் வரவு – செலவுத் திட்டமிடல் குழுக்களிலுள்ள சகல பிரதான பங்கீடுபாட்டாளர்களையும் (சம்பந்தப்பட்ட தரப்பினர்) பெயரிடல். (அரச துறை, அரச சார்பற்ற நிறுவனத்தினர், சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள், தனியார்த்துறை போன்றவை)<br>• ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலுமுள்ள திட்டமிடல் மற்றும் வரவு – செலவுத் திட்டமிடல் குழுக்களை மீள ஒழுங்கமைத்தல்/அமைத்தல்.<br>• சகல திட்டமிடல் மற்றும் வரவு – செலவுத் திட்டமிடல் குழுக்களுடனான ஆரம்பகட்ட கலந்துரையாடல்.<br>• உள்ளூராட்சி மன்றின் செயற்பாட்டுத் திட்டத்தை அங்கத்தவர்களுடன் பகிர்ந்துகொள்ளல்.<br>• திட்டமிடல் மற்றும் வரவு – செலவுத் திட்டமிடல் குழுக்களுக்கான செயற்பாட்டுத் திட்டத்தை மேம்படுத்தல். | | | |

**குறிப்புரைகள் :**

- 2012 ஆண்டில் பங்கேற்பு வரவு-செலவுத் திட்டத்திற்கான தேவையை உருவாக்குவதற்கென சுற்றுநிருபங்கள், சந்திப்புகள், NELSIP (வடக்கு கிழக்கு உள்ளூர் சேவையை மேம்படுத்தல் கருத்திட்டம்) இற்கான தேவைகள் ஆகியவற்றிற்கு ஊடாக உள்ளூராட்சி மன்றங்களின் அரசியல் மற்றும் நிருவாகத் தலைமைத்துத்தை அறிந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை உருவாக்கிய பின்பு உள்ளூராட்சி ஆணையாளரால்/உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை ஒருங்குபடுத்திக் கொள்ளமுடியும்.

- இக்காலகட்டத்தின் போது திட்டமிடல் மற்றும் வரவு – செலவுத் திட்டமிடல் பற்றிய சுற்றுநிருபத்தை/அறிவுறுத்தலை உள்ளூராட்சி ஆணையாளர்/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்க முடியும்.

- PAEC இன் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஏறத்தாள 8 – 10 ஆக மட்டுப்படுத்துவது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது.

## அதிகாரம் 03 : வரவு – செலவுத் திட்டமிடலுக்கு முன்னரான தரவுகளை சேகரித்தல் மற்றும் செயன்முறைப்படுத்தல்.

**பின்னணி :**

இது பங்கேற்புத் திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் செயன்முறையில் ஒரு முக்கிய செயற்பாடாகும். பங்கேற்புத் திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் தரவு சேகரித்தலுடன் தெடர்புடைய நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்களினால் சேகரிக்கப்படுவதற்குத் தேவைப்படும் பல்வேறுபட்ட தரவு வகைகள் மற்றும் அவற்றின் பிரயோக இடங்கள் ஆகியவை பற்றி வசதிகள் செய்பவர் பழக்கப்பட்டவராயிருத்தல் வேண்டும். இத்தகைய தரவுகளைச் சேகரிப்பது பற்றி உள்ளூராட்சி மன்றப்பணியாளர்களுக்கு கல்வியறிவூட்டுவதற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளூராட்சி மன்றங்களில் வசதிகள் செய்பவரால் ஒருங்கமைக்கப்படல் வேண்டும்.

**எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளும் விளைவுகளும்:**

- தரவு சேகரித்தல் மற்றும் தீர்மானம் மேற்கொள்வதில் அவற்றின் வினைத்திறன் கூடிய பாவனை ஆகியவற்றுக்காக உள்ளூராட்சிமன்ற பணியாளர்களின் அதிகரித்த இயலளவு,
- உள்ளூராட்சிமன்ற மற்றும் ஏனைய பங்கீட்டுப்பாட்டாளர்களுக்கு மத்தியில் உள்ளூராட்சி மன்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய துல்லியமான விழிப்புணர்வு.
- உள்ளூராட்சிமன்றப் பகுதியினுள் பல்வேறுபட்ட பொருளாதார முன்னுரிமைகள் இனங்காணப்பட்டுள்ளன.
- வீதிகள் சம்பந்தமாக முன்னுரிமையளிக்கப்பட்ட பொருளாதார முதலீட்டை மேற்கொள்வதற்கான அதிகரிக்கப்பட்ட வாய்ப்பு.

(கீழ்வரும் செயற்பாட்டுத் திட்டத்தில் வெளியீடுகள் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன.)

**கால எல்லை** : மூன்று வாரங்கள்

**பரிந்துரைக்கப்பட்ட செயன்முறை (பாவனைக்குரிய கருவிகள், சமர்ப்பிக்கப்படவுள்ள மாதிரிகள் அல்லது உதாரணங்கள்)**

பல்வேறு தரவுகளைச் சேகரிப்பதற்காக சில பிரதான செயற்பாடுகள் உள்ளூராட்சி மன்றத்தினால் ஆற்றப்படல் வேண்டும். உள்ளூராட்சி மன்றத்தினால் ஆற்றப்பட வேண்டிய இப்பிரதான செயற்பாடுகள் ஒவ்வொன்றினதும் கீழ் உள்ளடக்கப்படும் நடவடிக்கைகளை பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

- தரவு சேகரிக்கும் பங்குதாரர்களை இனங்காணல்.
- தரவு சேகரிப்பது பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்
- கிராம சேவையாளர் பிரிவு மட்டத்திலான தரவு சேகரிப்பு
  - சமூகத்தை ஈடுபடுத்தல்
  - அபிவிருத்தி நடவடிக்கை
  - பொருளாதார நடவடிக்கைகளும் முன்னுரிமைகளும்
  - கிராம சேவையாளர் பிரிவு பற்றிய விபரம்
- உள்ளூராட்சிமன்ற மட்டத்திலான தரவு சேகரிப்பு
  - கடந்த கால நிதிச் செயலாற்றுகை
  - 2012 ஆம் ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினம் பற்றிய மதிப்பீடு
  - உள்ளூராட்சி மன்றத்திற்குரித்தான வீதிகள் பற்றிய பதிவேடு.

| பிரதான செயற்பாடு | நடவடிக்கை | உதவியான ஆவணங்கள் | வெளியீடு/ வழங்கப்படக் கூடியவை | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| தரவு சேகரிப்பு பங்குதாரர்களை இனங்காணல் | • தரவு சேகரிப்பு பங்குதாரர்களை (DCP) இனங்காணல்<br>• DCP இற்கான விசாரணை நியதிகளை மேம்படுத்தல்<br>• வேலை சம்பந்தப்பட்ட ஒழுங்குகளை நிறைவேற்றுவதற்கு உள்ளூராட்சி மன்றங்களுடனான நிபுணத்துவ ஆலோசனை<br>• வேலை செய்யும் ஒழுங்குகளை நிறைவேற்றுதல். | DCP இன் வேலைக்கான நோக்கெல்லை (ரி8) | (உள்ளூராட்சி மன்றப் பணியாளர்கள் தவிர்ந்த) தகவல் சேகரிப்பில் ஈடுபடுத்தப்படவுள்ள உறுப்பினர்களின் பட்டியல் (டி10) | |
| தரவு சேகரிப்பு மீதான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | • தரவு சேகரிப்பு மீதான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை காலவரையறை செய்தல்.<br>• நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலை தயாரித்தல்<br>• தரவு சேகரிப்பு வடிவமைப்புக்களின் வரைவினைப் பகிர்ந்தளித்தல்.<br>• செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம், தரவு சேகரிப்புக் குழுக்களுக்கான பொறுப்புகளை ஒப்படைத்தல்.<br>• DCP உறுப்பினர்களை நிகழ்ச்சித் திட்டத்திற்கு அழைத்தல். | தரவு சேகரிப்பு மீதான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிகழ்ச்சிநிரல் (ரி9)<br><br>தரவு சேகரிப்பு வடிவமைப்பு வரைவு (ரி10 – ரி16) | தரவு சேகரிப்பிற்கான செயற்பாட்டுத் திட்டம் (டி11) | |
| திட்டமிடல் மற்றும் வரவு – செலவுத் திட்டமிடல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சமூகங்கள் பற்றிய தரவு சேகரிப்பு | • 2010 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட திட்டமிடல் குழுக்களின் அந்தஸ்த்து பற்றிய தரவு சேகரிப்பு<br>• கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் ஆற்றல்மிக்க பிரபல மற்றும் அர்ப்பணிப்புடைய உறுப்பினர்களை சமூகத்திலிருந்து இனங்காணல்.<br>• கிராம சேவையாளர் மட்டத்தில் தற்போதுள்ள திட்டமிடல் மற்றும் வரவு-செலவுத் திட்டமிடல் குழுக்களுக்கிடையிலான உறுப்புரிமை இடைவெளியை இனங்காணல்<br>• திட்டமிடல் மற்றும் வரவு-சொலவுத் திட்டமிடல் குழுக்களிலுள்ள சகல பிரதான பங்கீடுபாட்டாளர்களைப் பெயரிடல் (அரசதுறை/அரச சார்பற்ற துறைகள் /சமூகத்தை அப்படையாகக் கொண்ட | சமூகங்களின் பங்களிப்பு மற்றும் ஈடுபாடு ஆகியவை பற்றிய தரவு சேகரிப்பு வடிவமைப்புகள் (ரி10)<br><br>மீள்பரிசீலிக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் குழுக்களின் பட்டியல் (ரி8)<br><br>திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் குழுக்களுடனான (P&B) ஆரம்ப கலந்துரையாடல் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிநிரல். (ரி9)<br><br>ஒவ்வொரு குழுவுக்குமான செயற்பாட்டுத் திட்டம் (ரி10) | ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிற்குமான CFPB திட்டமிடல் வரவு செலவுத் திட்டமிடல் மீதான பிரஜைகள் குழுவினது வேலை செய்யக் கூடிய உறுப்பினர்களது பட்டியல் (டி12) | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுவனங்கள் /தனியார்த்துறை போன்றவை)<br>• தற்போதுள்ள திட்டமிடல் குழுக்களின் அந்தஸ்த்தைக் கருத்திற்கொண்டு கிராம சேவையாளர் பிரிவு ஒவ்வொன்றிலுமுள்ள திட்டமிடல் வரவு-செலவுத் திட்டமிடல் மீதான பிரஜைகள் (CFPB) இன் ஆற்றல் மிக்க உறுப்பினர்களை இனங்காணல்.<br>• ஆற்றல்மிக்க உறுப்பினர்களுடன் (சமூகங்களுடனான நிபுணத்துவ ஆலோசனைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உள்ளூராட்சி மன்றங்களுடன் தற்காலிகமாக வேலைசெய்யும் CFPB) கிராம சேவையாளர் பிரிவு ஒவ்வொன்றுக்குமான CFPB இன் பட்டியலைத் தயாரித்தல். | | | |
| கிராம சேவையாளர் பிரிவு ஒவ்வொன்றினதும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மீதான தரவு சேகரிப்பு | • தரவுகளைச் சேகரிப்பதற்கு பொருத்தமான முகவராண்மைகளை இனங்காணல்.<br>• தரவு சேகரிப்பு வடிவமைப்பை களப் பரிசீலனை செய்தல்.<br>• தரவு சேகரிப்பு வடிவமைப்புகளை நிறைவேற்றுதல்.<br>• வினாக்கொத்தை பிரதி பண்ணுதல் அல்லது அச்சிடல்<br>• தரவுகளைச் சேகரிப்பதற்கென குழுவைத் தொழிற்படச் செய்தல்.<br>• கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் தரவு சேகரிப்பு<br>• கொத்தணி மட்டத்தில் பங்கேற்பு நடுத்தரகால அபிவிருத்தித் திட்டத்தினை (PMTDP) அடிப்படையாகக் கொண்டு கிராம சேவையாளர் பிரிவுகளுக்கென அபிவிருத்தி நடவடிக்கைகளை மீள ஒழுங்கமைத்தல்.<br>• கடந்த வருட பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு கிராம சேவையாளர் பிரிவுகளுக்கென திருத்தியமைக்கப்பட்ட நடவடிக்கைப் பட்டியலை மேம்படுத்தல்.<br>• தரவுகளைப் பதிதலும் செயன்முறைப்படுத்தலும் | கிராம சேவையாளர் மட்டத்தில் அபிவிருத்தி முன்னெடுப்புகள் மீதான தரவு சேகரிக்கும் வடிவமைப்பு (ரி11)<br><br>கிராம சேவையாளர் மட்டத்தில் அபிவிருத்தி முன்னெடுப்பிற்கான தரவு செயன்முறை கருவி (பி1) | கிராம சேவையாளர் பிரிவு ஒவ்வொன்றிற்குமான அபிவிருத்தி நடவடிக்கைகளின் பட்டியல் (டி13) | |
| கிராம சேவையாளர் பிரிவு | • கிராம சேவையாளர் மட்டத்திலுள்ள பொருளாதார | கிராம சேவையாளர் மட்டத்திலுள்ள | கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள | |

| | | | | |
|---|---|---|---|---|
| ஒவ்வொன்றிலும் உள்ள பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய தரவு சேகரிப்பு | நடவடிக்கைகள் பற்றிய தரவுகளைச் சேகரிப்பதற்கு சம்பந்தப்பட்ட முகவராண்மைகள்/ தனிநபர்களை இனங்காணல்.<br>• தரவு சேகரிப்பு வடிவமைப்பின் களப் பரிசீலனை.<br>• தரவு சேகரிப்பு வடிவமைப்பினை நிறைவேற்றுதல்.<br>• வினாக்கொத்தை பிரதி பண்ணுதல் அல்லது அச்சிடல்.<br>• தரவுகளைச் சேகரிப்பதற்கென குழுவைத் தொழிற்படச் செய்தல்.<br>• கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் தரவு சேகரிப்பு<br>• தரவுகளைப் பதிதலும் செயன் முறைப்படுத்தலும் | பொருளாதார நடவடிக்கைகள் மீதான தரவு சேகரித்தல் வடிவமைப்பு (ரி12)<br><br>கிராம சேவையாளர் மட்டத்திலுள்ள பொருளாதார நடவடிக்கைகள் மீதான தரவு செயன் முறைப்படுத்தும் கருவி (பி2) | பொருளாதார பிரதான செயற்பாட்டாளர்கள் பற்றிய பட்டியல் (டி14) | |
| கிராம சேவையாளர் பிரிவு பற்றிய விரபங்கள் மீதான தரவு சேகரிப்பு | • தரவு சேகரிப்பதற்குப் பொருத்தமான முகவராண்மைகளை இனங்காணல்<br>• தரவு சேகரிப்பு வடிவமைப்பின் களப் பரிசீலனை.<br>• தரவு சேகரிப்பு வடிவமைப்பினை நிறைவேற்றுதல்.<br>• வினாக்கொத்தை பிரதி பண்ணுதல் அல்லது அச்சிடல்.<br>• தரவுகளைச் சேகரிப்பதற்கென குழுவைத் தொழிற்படச் செய்தல்.<br>• கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் தரவு சேகரிப்பு<br>• தரவுகளைப் பதிதலும் செயன் முறைப்படுத்தலும் | கிராம சேவையாளர் பரிவு பற்றிய விபரங்கள் மீதான தரவு சேகரித்ததல் வடிவமைப்பு (ரி13)<br><br>கிராம சேவையாளர் பிரிவு பற்றிய விபரங்கள் மீதான தரவு செயன்முறைப்படுத்தும் கருவி (பி3) | கிராம சேவையாளர் பிரிவு பற்றிய விபரங்களின் பட்டியல் (டி15) | |
| கடந்த கால நிதிச் செயலாற்றுகை மீதான தரவு சேகரித்தல் | • 2011 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட விபரத்தைச் சேகரித்தல்<br>• தரவு சேகரிப்பு வடிவமைப்பின் களப் பரிசீலனை.<br>• தரவு சேகரிப்பு வடிவமைப்பினை நிறைவேற்றுதல்.<br>• 2011 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்கள் பற்றி தரவுகளையும் உண்மைத் தொகையையும் சேகரித்தல்.<br>• 2011 ஆம் ஆண்டில் உள்ளவாறு வருமான நிலுவைகள் பற்றிய தரவு சேகரித்தல்.<br>• தரவுகளைப் பதிதலும் செயன் | கடந்த கால நிதிச் செயலாற்றுகை மீதான தரவு சேகரிப்பு வடிவமைப்பு (ரி14)<br><br>தரவு செயன்முறைப்படுத்தும் கருவி (பி4) | நிதிச் செயலாற்றுகையின் சாராம்சம் (டி16) | |

| | | | | |
|---|---|---|---|---|
| | முறைப்படுத்தலும் | | | |
| வருமானம் மற்றும் செலவினம் பற்றிய உத்தேச மதிப்பீட்டின் மீதான தரவு சேகரித்தல். | • தரவு சேகரிப்பு வடிவமைப்பின் களப் பரிசீலனை.<br>• தரவு சேகரிப்பு வடிவமைப்பினை நிறைவேற்றுதல்.<br>• 2011 ஆம் ஆண்டுக்கான வருமானம் மற்றும் செலவினங்கள் பற்றிய உத்தேச மதிப்பீடு சேகரித்தல்.<br>• தரவுகளைப் பதிதலும் செயன் முறைப்படுத்தலும் | வருமானம் வள மூலங்கள் பற்றிய உத்தேச மதிப்பீட்டின் மீதான தரவு சேகரித்தல் (ரி15)<br><br>தரவு செயன்முறைப்படுத்தும் கருவி (பி5) | 2011 ஆம் ஆண்டிற்கான வருமானத்தின் உத்தேச மதிப்பீடு (டி17)<br><br>2011 ஆம் ஆண்டிற்கான செலவினத்தின் உத்தேச மதிப்பீடு (டி18) | |
| உள்ளூராட்சி மன்றங்களுக்கான வீதிப் பதிவேடு | • இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் (SLILG) வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கமைய வீதிப் பதிவேட்டினை மேம்படுத்துவதற்கென குழுவொன்றை அமைத்தல்.<br>• தரவு சேகரிப்பு வடிவமைப்பின் களப் பரிசீலனை.<br>• தரவு சேகரிப்பு வடிவமைப்பினை நிறைவேற்றுதல்.<br>• வீதிப்பதிவேட்டினை நிறைவேற்றுதல்.<br>• பிரதான வலையமைப்பினை இனங்காணுதல்<br>• முன்னுரிமையளிக்கப்பட்ட வீதிகளுக்கான முதலீட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.<br>• முன்னுரிமையளிக்கப்பட்ட வீதிகள் பற்றிய பட்டியலைத் திட்டமிடல் மற்றும் வரவு-செலவுத் திட்டமிடலுக்கான குழுவுடன் பகிர்ந்துகொள்ளுதல். | வீதிப்பதிவேடு பற்றிய தரவு சேகரிப்பு வடிவமைப்பு (ரி16)<br><br>தரவு செயன்முறைப்படுத்தும் கருவி (பி6) | வீதிப்பதிவேடு சம்பந்தமான வேலையில் ஈடுபடும் உறுப்பினர்களின் பட்டியல் (டி19)<br><br>கிராம சேவையாளர் பிரிவு ஒவ்வொன்றிலுமுள்ள முன்னுரிமை யளிக்கப்பட்ட வீதிகள் பற்றிய பட்டியல் (டி20) | |
| அபிவிருத்தி பற்றிய முன்னெடுப்புகளையும் மற்றும் இதர சம்பந்தப்பட்ட தரவுகளைப் படமாக்கல் | • பூகோள தகவல் முறைமை (GIS) பிரயோகத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகளைப் படமாக்குவதற்கு குழுவிடம் ஒப்படைத்தல்<br>• படமாக்கப்பட வேண்டிய பிரதான தகவலை இனங்காணல்<br>• வீதி வலையமைப்புடன் கூடிய கிடைக்கப்பெறும் கிராம சேவையாளர் பிரிவு வரைபடங்களைச் சேகரித்தல்<br>• அபிவிருத்தி முன்னெடுப்புகளை கிராம சேவையாளர் பிரிவு வரைபடங்களுடன் ஒன்றிணைத்தல். | படமாக்கப்பட வேண்டிய தரவுகளின் பட்டியல் (ரி17)<br><br>தரவு செயன்முறைப்படுத்தும் கருவி (பி7) | படமாக்கல் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உறுப்பினர்களின் பட்டியல் (டி21)<br><br>சகல அபிவிருத்தி முன்னெடுப்புகளுடனான கிராம சேவையாளர் பிரிவு வரைபடங்கள் (டி22) | |

**குறிப்புரை :**

தரவு சேகரிப்பு விடயத்தில் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் இளைஞர்கழகங்கள், பல்கலைக்கழகங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் ஆகிய அமைப்பாண்மைகளுடன் ஒன்றிணைந்து செயற்படுவது மிகவும் பாராட்டுதலுக்குரியதாகும். இத்தகைய அமைப்பாண்மைகளை உள்ளூராட்சி மன்றங்கள் இனங்காண்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளர்/ உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் உதவ வேண்டியது கட்டாயமாகும்.

## அத்தியாயம் 4 : உள்ளூராட்சி மன்றத்தின் கடந்தகால வரவு செலவுத் திட்டம் மற்றும் நிதிச் செயலாற்றுகை பற்றிய பகுப்பாய்வு

**பின்னணி :**

உள்ளூராட்சி மன்றங்களின் நிதிச் செயலாற்றுகையுடன் தொடர்புபடுகின்ற செயற்பாடுகள் பற்றி இந்த அத்தியாயத்தில் விபரிக்கப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்களின் நிதிச் செயலாற்றுகையின் முக்கியத்துவம் பற்றி வசதிகள் செய்வோர் அறிந்திருத்தல் வேண்டும். பங்கேற்பு திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்வதுடன் சம்பந்தப்பட்டுள்ள சமூக ஆலோசனை மற்றும் வருமான உருவாக்கத்தை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கையாக குறித்த செயற்பாட்டின் பெறுபேறு அமைகின்றது.

**எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளும் விளைவுகளும்:**

- உள்ளூராட்சி மன்ற பதவியனியின் ஆற்றல்களை மேம்படுத்துவதற்காக அவர்களின் நிதிச் செயலாற்றுகையை பகுப்பாய்வு செய்தல்.
- உள்ளூராட்சி மன்றங்களின் வருமான உருவாக்க ஆற்றலை விளங்கிக் கொள்வதற்கான திறனை வளர்த்தல்.
- உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்வது தொடர்பான செயலாற்றுகை பற்றி சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் மத்தியில் அறிவுறுத்துவதற்கான வாய்ப்புகளை வளர்த்தல்.

(கீழுள்ள செயற்பாட்டுத் திட்டத்தில் வெளியீடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.)

**கால எல்லை** : ஒரு வாரம்

**பரிந்துரைக்கப்பட்ட செயன்முறை (பாவனைக்குரிய கருவிகள், சமர்ப்பிக்கப்படவுள்ள மாதிரிகள் அல்லது உதாரணங்கள்)**

வசதிகள் செய்வோர் வெளியீடுகள் தொடர்பில் மிகவும் அவதானிப்புடன் இருக்க வேண்டும் என்பதுடன், உள்ளூராட்சி மன்றங்களில் குறித்த வெளியீடுகளை அமுல்படுத்தவும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும். உள்ளூராட்சி மன்றத்தினால் ஆற்றப்பட வேண்டிய இப்பிரதான செயற்பாடுகள் ஒவ்வொன்றினதும் கீழ் உள்ளடக்கப்படும் நடவடிக்கைகளை பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

- 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டப் பொழிப்பை தயார் செய்தல்.
- உள்ளூராட்சி மன்றத்தினால் 2011 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளும், நிதி ஒதுக்கங்களும்.

| பிரதான செயற்பாடு | நடவடிக்கை | உதவியான ஆவணங்கள் | வெளியீடு/ வழங்கப்படக் கூடியவை | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டப் பொழிப்பை தயார் செய்தல். | • தரவுகளை சேகரிக்கும் குழுவினால் சேகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மற்றும் உண்மையான வருமானங்களும், செலவினங்களும் பற்றிய தரவுகள்.<br>• வருமானம், செலவினம் மற்றும் நிலுவைகள் பற்றிய பகுப்பாய்வு<br>• உள்ளூராட்சி மன்றங்களுக்கான வரவு செலவுத் திட்ட பொழிப்பை தயார் செய்தல்<br>• வரவு செலவுத் திட்ட பொழிப்பை சமர்ப்பிப்பதற்கான முன்வைத்தலை (presentation) தயார் செய்தல் | வரவு செலவுத் திட்ட பகுப்பாய்வுக் கருவி (P8)<br>வரவு செலவுத் திட்டப் பொழிப்பை சமர்ப்பித்தல் (T18) | வரவு செலவுத் திட்டப் பொழிப்பு (D23) | |

| | | | | |
|---|---|---|---|---|
| | • சமூதாய கலந்தாராய்வுக் குழுவுடன் பகிர்ந்து கொள்ளல் | | | |
| உள்ளூராட்சி மன்றத்தினால் 2011 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளும், நிதி ஒதுக்கங்களுமம | • உள்ளூராட்சி மன்றங்களினால் சபை நிதி மற்றும் ஏனைய நிதிகளைப் பயன்படுத்தி 2011 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகள் பற்றிய கூட்டான தரவுகள்<br>• 2011 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி செயற்பாடுகளின் செலவினங்கள் பற்றிய தரவுகளின் பகுப்பாய்வு<br>• வரவு செலவுத் திட்ட பொழிப்பில் தகவல்களை உள்ளடக்குதல். | வரவு செலவுத் திட்ட பகுப்பாய்வுக் கருவி (P8)<br>வரவு செலவுத் திட்டப் பொழிப்பை சமர்ப்பித்தல் (T18) | வரவு செலவுத் திட்டப் பொழிப்பு (D23) | தேவையான தரவுகளை சேகரிப்பதற்காக T11 மற்றும் T14 ஒன்றாக பயன்படுத்தப்பட முடியும். |

**குறிப்புரைகள் :**

உள்ளூராட்சி மன்றங்களினால் 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டப் பொழிப்புரை வெளியிடப்பட்டு சமூதாய கலந்துரையாடல்களின் போது பகிர்ந்து கொள்ளப்படல் வேண்டும். வரவு செலவுத் திட்டப் பொழிப்புரையின் அடிப்படையில் வருமான உருவாக்கம் தொடர்பில் பொது மக்கள் மத்தியில் விசேடமாக சமூதாய கலந்துரையாடல்களில் கலந்து கொள்வோர் மத்தியில் அறிவுறுத்தல் வேண்டும்.

**அத்தியாயம் 5 : 2012 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான ஒதுக்கங்கள் பற்றிய பகுப்பாய்வு**

**பின்னணி :**

வரவு செலவுத் திட்டத்தின் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான மதிப்பீடுகள் யதார்த்தங்கள் மற்றும் நடைமுறை அறிவுகள் இன்றி தயார் செய்யப்படுகின்றன. இந்த அத்தியாயத்தின் கீழ் வருமானம் மற்றும் செலவினம் பற்றிய மதிப்பீடுகளை நடைமுறை ரீதியான செயற்பாட்டின் மூலம் தயார் செய்வது தொடர்பாக விபரிக்கின்றது. இந்த அத்தியாயத்தின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள செயல்முறைகளை பின்பற்றுவதற்கான ஒத்துழைப்பை வசதிகள் செய்வோர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்க வேண்டும். சுய வருமான மூலங்களின் ஊடாக உழைக்கப்படுகின்ற நிதியிலிருந்து அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஒதுக்கக்கூடிய நிதியின் அளவை மதிப்பீடு செய்வதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு வசதிகள் செய்வோர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சபையின் சகல கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் நிதி ஒதுக்கங்களை செய்வதற்காக உள்ளூராட்சி மன்றத்தின் அரசியல் தலைமைத்துவத்தை வசதிகள் செய்வோர் ஊக்குவிக்க வேண்டும். கீழே பிரதான செயற்பாடுகளின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை உள்ளூராட்சி மன்றங்கள் பின்பற்றுவதன் ஊடாக வரவு செலவுத் திட்டத்தின் வருமானம் மற்றும் செலவினம் பற்றிய உண்மையான மதிப்பீடுகளுக்கு நெருக்கமான மதிப்பீடுகளை செய்யும் நிலையை இனங்கண்டு கொள்ள முடியும்.

**எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளும் விளைவுகளும்:**

- வருமானம் மற்றும் செலவினத்தை மதிப்பீடு செய்வதற்கான உள்ளூராட்சி மன்ற பதவியனியின் ஆற்றல்கள் மேம்படுத்தப்படல்.
- உள்ளூராட்சி மன்றங்களின் வருமான உருவாக்கம் மற்றும் செலவின முகாமைத்துவ ஆற்றலை விளங்கிக் கொள்வதற்கான திறனை வளர்த்தல்.
- உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்வது தொடர்பான செயலாற்றுகை பற்றி சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் மத்தியில் அறிவுறுத்துவதற்கான வாய்ப்புகளை வளர்த்தல்.
- வளங்களை சமமாக பகிர்ந்தளிப்பதற்காக அரசியல் ரீதியான இணக்கப்பாடு வளர்க்கப்படல்.

(கீழுள்ள செயற்பாட்டுத் திட்டத்தில் வெளியீடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.)

**கால எல்லை** : ஒரு வாரம்

**பரிந்துரைக்கப்பட்ட செயன்முறை (பாவனைக்குரிய கருவிகள், சமர்ப்பிக்கப்படவுள்ள மாதிரிகள் அல்லது உதாரணங்கள்)**

வசதிகள் செய்வோர் வெளியீடுகள் தொடர்பில் மிகவும் அவதானிப்புடன் இருக்க வேண்டும் என்பதுடன், உள்ளூராட்சி மன்றங்களில் குறித்த வெளியீடுகளை அமுல்படுத்தவும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும். உள்ளூராட்சி மன்றத்தினால் ஆற்றப்பட வேண்டிய இப்பிரதான செயற்பாடுகள் ஒவ்வொன்றினதும் கீழ் உள்ளடக்கப்படும் நடவடிக்கைகளை பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

- எதிர்பார்க்கப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் பற்றிய மதிப்பீடு
- அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான நிதி ஒதுக்கங்கள் (சுய நிதி ஒதுக்கங்களும் ஏனைய மூலங்களிலிருந்தும். NELSIP போன்றன)

| பிரதான செயற்பாடு | நடவடிக்கை | உதவியான ஆவணங்கள் | வெளியீடு/ வழங்கப்படக் கூடியவை | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டப் பொழிப்பை தயார் செய்தல். | • தரவுகளை சேகரிக்கும் குழுவினால் சேகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மற்றும் உண்மையான வருமானங்களும், செலவினங்களும் பற்றிய தரவுகள்.<br>• வருமானம், செலவினம் மற்றும் நிலுவைகள் பற்றிய பகுப்பாய்வு<br>• உள்ளூராட்சி மன்றங்களுக்கான வரவு செலவுத் திட்ட பொழிப்பை தயார் செய்தல்<br>• உள்ளூராட்சி மன்ற அரசியல் தலைமைத்துவத்துக்கான வரவு செலவுத் திட்ட பொழிப்பை சமர்ப்பிப்பதற்கான முன்வைத்தலை (presentation) தயார் செய்தல்<br>• சமூதாய கலந்தாராய்வு குழுவுடன் பகிர்ந்து கொள்ளல் | வரவு செலவுத் திட்ட பகுப்பாய்வுக் கருவி (P9)<br>வரவு செலவுத் திட்டப் பொழிப்பு பற்றிய சமர்ப்பித்தல் (T19) | 2012 இற்கான வரவு செலவுத் திட்டப் பொழிப்பு (D24) | |
| அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான நிதி ஒதுக்கங்கள் பற்றி உள்ளூராட்சி மன்றங்களுடனான கலந்தாராய்வுகள் | • உள்ளூராட்சி மன்றத்தின் நகரமுதல்வர் தவிசாளர் உள்ளிட்ட சகல உறுப்பினர்களுடனுமான கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்யவும்<br>• 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டப் பொழிப்பை சபையில் சமர்ப்பிக்கவும்.<br>• அபிவிருத்தி வேலைகளுக்கான ஒதுக்கங்கள் பற்றிய கலந்துரையாடவும்.<br>• அபிவிருத்தி வேலைகளுக்கான மொத்த ஒதுக்கங்கள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளுக்கான உறுதியற்ற ஒதுக்கங்களை நிறைவு செய்யவும் | கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரல் (T20) | பதவியணிக்கான அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களின் பொழிப்பு (D25)<br>கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கான ஒதுக்கங்கள் பற்றிய பட்டியல் | |

**குறிப்புரைகள் :**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள செயற்பணிகளை ஆற்றும் பொருட்டு வசதிகள் செய்வோர் உள்.ஆ. / உள். உ. ஆணையாளரின் அறிவுரைகளை பயன்படுத்த வேண்டும்.கிராம அலுவலர் பிரிவு அல்லது வட்டாரங்களுக்கான நிதி ஒதுக்கத்தை தீர்மானிக்கும் பொருட்டு அரசியல் தலைமைகளின் இணக்கப்பாட்டை வசதிகள் செய்வோர் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

# அத்தியாயம் 6 : கிராம அலுவலகர் மட்டத்தில் சமுதாயக் கலந்தாராய்வுகள்

**பின்னணி**

மத்தியகால அபிவிருத்தித் திட்டமிடல்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றின் உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக உள்ளூராட்சி மன்றங்களினால் சமுதாயக் கலந்தாராய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. சமுதாய உள்ளீடுகள் பங்குபற்றுதலுடன் கூடிய திட்டமிடல்களில் மாத்திரமல்லாது, உள்ளூராட்சி மன்றங்களின் அடுத்துவருகின்ற வருடாந்த வரவு செலவுத் திட்டங்களிலும் உள்ளடக்கப்படுவதற்காக சமுதாய உள்ளீடுகள் இங்கு நாடப்பட்டன. அவர்களது பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் ஒப்பீட்டளவில் சமுதாய நம்பிக்கைகள் அதிகளவில் இவற்றின் மீது ஏற்படுவதுடன், இவை மிகக் குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. ஆகவே வரவு செலவுத் திட்ட நோக்கத்திற்காக சமுதாய மட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கலந்தாராய்வுகள் செயன்முறையானது பெரும்பான்மை சமுதாயத்தினதும், ஓரங்கட்டப்பட்ட மக்களினதும் உண்மையான முன்னுரிமைப்படுத்தல் வெளிப்படுவதை இலகுபடுத்தக்கூடிய விதத்தில் போதியளவு திறந்த வாய்ப்புக்களையும்/நெகிழ்ச்சித் தன்மைகளையும் மற்றும் பாதுகாப்பு/கட்டுப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும். பங்கேற்புடன் கூடிய வரவு செலவுத் திட்டமிடலுக்கான சுமுதாயக் கலந்தாராய்வுகள், சமுதாயத்தின் குறிப்பிடக்கூடிய இரு பிரிவுகளில் தமது அவதானத்தை செலுத்துவது அவசியமாகும்.

- பரந்த சமுதாயம் (உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படும் சேவைகளை அதிகளவில் பெற்றுக் கொள்கின்ற நகர வாழ் மக்கள்)
- தனியார்த் துறையினர் (உள்ளூராட்சி மன்றத்தின் நிதித் திரட்டலுக்கு அதிகளவு பங்களிப்புச் செய்கின்ற அதேவேளை நகரத்தின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்பவர்கள்)

நகரச் சமுதாயத்தின் மிக முக்கிய பிரிவாக தனியார் துறை காணப்படுகின்றது. இது நகரத்தின் பொருளாதார உருவாக்கம் தொடர்பான வருமானங்களைத் தோற்றுவித்தல், சொத்துக்களை கட்டியெழுப்பல், வேலை வாய்ப்புக்களை உருவாக்கல் ஆகிய விடயங்களிலும் ஈடுபடுகிறது. உள்ளூராட்சி மன்றங்களின் பிரதான வருமான மூலமாக வர்த்தகச் சமூகம் திகழ்கின்றது. இவ்விதமான பின்புலங்களில், வர்த்தகச் சமுதாயத்தின் நலனுக்காக மாத்திரமல்லாது நகரத்தில் வாழ்கின்ற மக்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றம் அகியவற்றின் நலனுக்காகவும் சிறந்த வர்த்தகச் சூழலை உருவாக்குவது உள்ளூராட்சி மன்றத்தின் பொறுப்பாகும். ஆகவே தனியார்த் துறையினரின் தேவைகளை/சேவைகளை வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் முன்னுரிமைப்படுத்துவதன் மூலம் அதன் முதவீடுகளுக்கு அதிக பலனைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதுடன் தனது வரவு செலவுத் திட்டத்தை வலுவுள்ளதாகவும், சட்டரீதியானதாகவும் மாற்றியமைக்கிறது.

**எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் மற்றும் விளைவுகள்**

- வரையறைச் செயன்முறை மூலமாக சமுதாயத்துடன் இணைந்து செயற்படக்கூடிய வித்தில் உள்ளூராட்சி மன்றங்களின் ஆற்றல்களை மேம்படுத்தல்.
- தனியார்த் துறையுடனான பங்காண்மைகள் உள்ளடங்கலாக உள்ளூராட்சி மன்றங்கள், சமுதாயம் ஆகியவற்றை மேம்படுத்தல்.

- ஒட்டுமொத்தச் சமுதாயம் அதன் முக்கியமான துணைப்பிரிவுகள் ஆகியவற்றுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு சமுதாயத்திற்கான ''அபிவிருத்தி கொள்வனவுப் பட்டியல்'' ஐத் தயாரித்தல்.
- உள்ளூராட்சி மன்றத்தின் எதிர்கால வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்காக சமுதாய உடன்பாடுடன் கூடிய தேவைகள்/சேவைகள் அபிவிருத்தி முன்னுரிமைப்படுத்தல் பட்டியலைத் தயாரித்தல்.
- பாரிய, சிறிய/மத்திய வியாபாரத் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களை போதியளவு பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய விதத்தில் ஒட்டுமொத்த வர்த்தகச் சமூகத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு பூரணத்துவமிக்க பிரேரணைகளைக் கொண்ட பட்டியலைத் தயாரித்தல்.
- உள்ளூராட்சி மன்றத்தின் எதிர்கால வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்காக வர்த்தக சமுதாயத்தின் உடன்பாடுடன் கூடிய தேவைகள்/சேவைகள் அபிவிருத்தி முன்னுரிமைப்படுத்தல் பட்டியலைத் தயாரித்தல்.

(கீழுள்ள செயற்பாட்டுத் திட்டத்தில் வெளியீடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.)

**காலப்பகுதி** : ஒரு வாரம்

**பரிந்துரைக்கப்பட்ட செயன்முறைகள் (பயன்படுத்தக்கூடிய கருவிகள், சமர்ப்பிக்கக்கூடிய மாதிரிகள் அல்லது உதாரணங்கள்.**

வெளியீடுகள் பற்றி இலகுபடுத்துனர் நன்கு அறிந்திருப்பதுடன் அவற்றை உள்ளூராட்சி மன்றங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு தயார் நிலையிலும் இருக்க வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களினால் செயற்படுத்திவருகின்ற ஒவ்வொரு பிரதான செயற்பணியின் கீழ் வருகின்ற செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் அட்டவணை எடுத்துக் காட்டுகின்றது.

- பிரதான பங்கீட்டுப்பாட்டாளர் கலந்துரையாடல்
- திட்டமிடல், வரவு செலவுத்திட்டம் தயாரித்தல் ஆகியன தொடர்பான பிரசைகள் ஒன்றியத்தை அணிதிரட்டல்.
- திட்டமிடல், வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல் தொடர்பான இலகுபடுத்துனர் பயிற்சி.
- கிராம அலுவலர் மட்டத்திலான சமுதாயக் கலந்தாராய்வுகள்.
- கிராம அலுவலர் மட்டத்திலுள்ள பொருளாதாரச் செயற்பாட்டாளர்களுடன் (தனியார்த்துறை) கலந்தாராய்வுகளில் ஈடுபடல்.

| பிரதான செயற்பணி | செயற்பாடு | வெளியீடு/ வழங்கக் கூடியவைகள் | குறிப்புகள் |
|---|---|---|---|
| பிரதான சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் கலந்துரையாடல்கள் | • வினைத்திறன்மிக்க சமுதாய கலந்தாராய்வுகளுக்கு அவசியமான பிரதான சம்பந்தப்பட்ட தரப்பினர்களை இனங்காணல்.<br>• சம்பந்தப்பட்ட கிராம அலுவலகர்களுடனும் ஏனைய பிரதான சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடனும் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்து அவர்களின் உதவியைப் பெறுதல்.<br>• சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கள உத்தியோகத்தர் (கிராம சேவகர், சமுர்த்தி அதிகாரி போன்றோர்) மற்றும் ஏனைய பிரதான சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் முகவர்களுக்கென ஆரம்ப கட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.<br>• கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் நடைபெறவுள்ள கலந்தாராய்வுகளில் பங்குபற்றுவதற்காக அழைக்கக்கூடிய சகல பிரதான சம்பந்தப்பட்ட தரப்பினர்களையும் இனங்காணல். | | |
| திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல் தொடர்பான பிரசைகள் ஒன்றியத்தை அணிதிரட்டல். | • திட்டமிடல் மற்றும் வரவுசெலவுத் திட்டத்தை தயாரித்தல் தொடர்பான பிரசைகள் அரங்கில் (CFPBS) பங்குபற்றுவதற்கு வாய்ப்புள்ள உறுப்பினர்களது பெயர்பட்டியலைப் பயன்படுத்தி உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளை அட்டவணைப்படுத்தல்.<br>• கிராம அலுவலர் மட்டத்தில் உருவாக்கப்படவுள்ள CFPB இன் நோக்கங்கள், வகிபாகங்கள், பொறுப்புகள் பற்றி எதிர்காலத்தில் பங்குபற்றுவதற்கு வாய்ப்புள்ள உறுப்பினர்களிடம் ஆரம்ப கட்ட கலந்துரையாடலின் போது எடுத்துரைக்கவும்.<br>• CFPB இல் எதிர்காலத்தில் பங்குபற்றுவதற்கு வாய்ப்புள்ள உறுப்பினர்களிடம் அவர்களது | | |

| | | | |
|---|---|---|---|
| | உடன்பாட்டை பெற்றுக்கொள்ளுமுகமாக உள்ளூராட்சி மன்றம் தொடர்பான செயற்திட்டத்தினை பகிர்ந்துகொள்ளல்.<br>• ஒவ்வொரு கிராம அலுவலர்கள் பிரிவிற்குமென தற்காலிக CFPB ஐ தோற்றுவித்தல்.<br>• தற்காலிக CFPB இன் பொறுப்புகளை உள்ளடக்கியதோர் நகல் வரைவுத்திட்டத்தை CFPB இற்காக விருத்தி செய்தல். | | |
| திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல் தொடர்பாக இலகுபடுத்துனர்களுக்கு பயிற்சியளித்தல் | • பங்குபற்றுனர்களுடன் கூடிய திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல் தொடர்பான பயிற்சி மொடியூலை விருத்தி செய்தல்<br>• பயிற்சி தொடர்பான பொருட்களை விருத்தி செய்தல்<br>• மொடியூளை தேசிய மொழிகளில் மொழியாக்கம் செய்தல்.<br>• பயிற்சிக்காக PBAT இலிருந்து பொருத்தமான உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல்.<br>• பயிற்சியை கால அட்டவணைப்படுத்தல்.<br>• பயிற்சியை கொண்டு நடாத்தல்<br>• கிராம அலுவலகர் பிரிவு கலந்தாராய்வுகளுக்கென கால அட்டவணை தொடர்பான இறுதி முடிவெடுத்தல். | | |
| கிராம அலுவலகர் மட்டத்திலான சமுதாயக் கலந்தாராய்வுகள் | • கிராம அலுவலர் பிரிவு கலந்தாராய்வுகள் கால அட்டவணை தொடர்பாக சம்பந்தப்பட்ட தற்காலிக CFPB உறுப்பினர்களிடம் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.<br>• பிரதான பங்கீட்டுப்பாட்டாளர் கலந்துரையாடலில் இனங்காணப்பட்டபடி கலந்தாராய்வுகள் தொடர்பாக ஏனைய பொருத்தமான சம்பந்ப்பட்ட தரப்பினர்களுக்கும் அறிவிக்கவும்.<br>• கிராம அலுவலகர் மட்டத்திலான கலந்தாராய்வுகளுக்கென உள்ளூராட்சி மன்றத் தலைமைத்துவம் மூலமாக சமுதாய உறுப்பினர்களுக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட | | |

| | | | |
|---|---|---|---|
| | தரப்பினா்பளுக்குமான அழைப்பிதழை அனுப்பி வைக்கவும்.<br>• கலந்தாராய்வுகளை கால அட்டவணைப்படுத்தவும்.<br>• நிகழ்ச்சி நிரல் மற்றும் சமாப்பணம் ஆகியவற்றுடன் கலந்தாராய்வுகளுக்காக தயாா்படுத்தவும்.<br>• கலந்தாராய்வுகளை கொண்டு நடத்தவும்.<br>• தற்காலிக CFPB என மேலதிக உறுப்பினா்களை இனங்காணவும்<br>• கலந்தாராய்வின் இறுதியில் கிராம அலுவலகா் மட்டத்திற்கான CFPB ஐ உத்தியோக பூா்வமாக உருவாக்கவும்.<br>• கிராம அலுவலகா் மட்டத்திலான கலந்தாராய்வுகளின் பின்னா் ஆரம்பகட்ட ஆவணத்தை பூரணப்படுத்தவும். | | |
| கிராம அலுவலா் மட்டத்தில் பொருளாதாரச் செயற்பாட்டாளா்களுடனான கலந்தாராய்வுகள் (தனியாா்த் துறை) | • CFPB மற்றும் PBEC ஆகியவற்றின் உதவியுடன் கிராம அலுவலகா் பிரிவு மட்டத்திலான கலந்தாராய்வுகளுக்கான தனியாா்த்துறைப் பிரதிநிதிகளின் முழுமையான பட்டியலை இனங்காணல் (கிராம அலுவலகா் மட்ட பொருளாதாரச் செயற்பாடுகள் மூலமாக திரட்டப்பட்ட தரவுகளின் பிரகாரம்)<br>• பிரதான சம்பந்தப்பட்ட தரப்பினா்களுடனான கலந்துரையாடல்களில் அடையாளம் காணப்பட்டதன் பிரகாரம் கலந்தாராய்வுகள் தொடா்பாக ஏனைய பொருத்தமான சம்பந்தப்பட்ட தரப்பினா்களுக்கும் அறிவிக்கவும்.<br>• கிராம அலுவலகா் மட்டக் கலந்துரையாடல்களுக்காக உள்ளூராட்சி மன்ற அரசியல் தலைமைத்துவம் மூலமாக சம்பந்தப்பட்ட தரப்பினா்களுக்கும் தனியாா்த்துறைப் பிரதிநிதிகளுக்கும் அழைப்பிதழை அனுப்பி வைக்கவும்<br>• கலந்தாராய்வுகளை கால அட்டவணைப்படுத்தவும் | | |

| | | | |
|---|---|---|---|
| | • நிகழ்ச்சி நிரல் மற்றும் சமா்ப்பணம் ஆகியவற்றுடன் கலந்தாராய்வுகளுக்காக தயாா்படுத்தவும்.<br>• கலந்தாராய்வுகளை கொண்டு நடாத்தவும்.<br>• CFPB இற்கென மேலதிக தனியாா்த்துறை பிரதிநிதிகளை இனங்காணவும்.<br>• கிராம அலுவலகா் மட்டத்திலான கலந்தாராய்வுகளின் பின்னா் ஆரம்பகட்ட ஆவணத்தை பூரணப்படுத்தவும். | | |

**குறிப்புரைகள் :**

ஆரம்பக்கட்ட சமுதாய மட்டத்திலான கலந்தாராய்வுகளின் பின்னர் CFPB உறுப்பினர்களின் உதவிகளைப் பயன்படுத்துவதோடு, கிராம அலுவலகர் பிரிவு அல்லது பகுதிகளுக்கு முறையான விஜயங்களை மேற்கொள்வதன் மூலம் சமுதாயத்துடன் மிக நெருக்கமான தொடர்பு முறைகளை உள்ளூராட்சி மன்றங்களும் PBEC உம் பேணல் வேண்டும். ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் நடைபெற்றதன் பிரகாரம் சமுதாயத்தினால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளூராட்சி மன்றங்கள் நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கும் பொழுது சமுதாயமானது காத்திரமான ஆர்வங்களை வெளிப்படுத்துவதுடன் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அவசியமான வாய்ப்புள்ள சகல உதவிகளையும் அது வழங்குகின்றது. வீதிகள் மற்றும் சமுதாய நிலையங்கள் போன்ற சொத்துக்களை கட்டியமைப்பதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் இவ்வகையான உதவிகள் மிகமுக்கியமானதாகும். அதேவேளை சமுதாயத்திற்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்குமிடையில் நீண்டகால காத்திரமிக்க பங்காண்மைகளைக் கட்டியெழுப்புவதற்கும் இவை இட்டுச் செல்கின்றன.

பரந்த சமுதாயத்துடன் ஒப்புநோக்குகையில் எண்ணிக்கையின் அடிப்படையில் தனியார்த்துறை மிகவும் சிறிதாகவே தோன்றுகிறது. இருப்பினும் அதனது பொருளாதாரப் பலம் தொழில்வாண்மைமிக்க திறமைகள் சமூக அந்தஸ்த்து ஆகியன அதனை ஓர் சக்திமிக்க அமைப்பாக மாற்றியுள்ளது. இதன்மூலம் இது உள்ளூராட்சி மன்றங்களை வகைப்பொறுப்புள்ளதாக திகழச்செய்கின்ற அததேவேளை உள்ளூராட்சி மன்றங்களுக்கு பாரிய உதவிகளை வழங்குகின்றது. எனவே உள்ளூராட்சி மன்றங்களின் முக்கிய பங்கீட்டுப்பாட்டாளர்கள் என்ற முறையில் தனியார்த் துறையினரின் பங்களிப்புகள் சமுதாயப் பங்குபற்றுதலை அர்த்தபுஷ்டியுள்ளதாக மாற்றுகிறது. மேலும் பங்குபற்றுதல் முறையில் திட்டமிட்டு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் செயன்முறையை உள்ளூராட்சி மன்றங்களில் ஓர் நிரந்தர அம்சமாகத் திகழ்வதற்கு இது துறைபுரிகின்றது.

**அத்தியாயம் 7 : பிந்திய ஆலோசனை ஆவணமயப்படுத்தல் மற்றும் செல்லுபடியானதாக்கல்**

- கிராம அலுவலர் மட்டத்திலான பிந்திய ஆலோசனை ஆவணமயப்படுத்தல்
- உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டத்தை செல்லுபடியானதாக்கலும், பூர்த்தி செய்வதும்.
- சமூதாய மட்டத்தில் திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டத்தை செல்லுபடியானதாக்கலும், பூர்த்தி செய்வதும்.

**அத்தியாயம் 8 : இறுதி ஆவணமயப்படுத்தல்**

- முன்னுரிமை கருத்திட்டங்களுக்கான கருத்திட்ட திட்டமிடல் ஆவணம்
- இறுதி அறிக்கையை தயார் செய்தல்

**அத்தியாயம் 9 : கண்காணிப்புத் திட்டம்**

- திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்ட செயற்பாட்டின் போதான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு
- வரவு செலவுத் திட்டத்தை தொடர்ச்சியாக கண்காணிக்கும் செயல்முறை